# ஊடக வெளியீடு

# ஜனநாயக ஆட்சி தொடர்பான நம்பிக்கைச் சுட்டி ஆய்வு முடிவுகளின் சுருக்கம் மற்றும் கண்ணோட்டம் - டிசம்பர் 2023

## அறிமுகம்

இந்த அறிக்கையானது ஜனநாயக ஆட்சி தொடர்பான நம்பிக்கைச் சுட்டி (அலை 5) ஆய்வு முடிவுகளின் அடிப்படையில் மாற்றுக்கொள்கைளுக்கான நிலையத்தின் (CPA) கணக்கெடுப்பு ஆய்வுப்பிரிவான சோஷல் இன்டிகேட்டர் (SI) இனால் தயாரிக்கப்பட்டது. விக்கிரமசிங்க அரசாங்கமானது பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்காக என்று தோன்றுகின்ற பொருளாதார மற்றும் கொள்கை சீர்திருத்தங்களை தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகின்றது. சராசரி குடிமக்கள் பொருளாதார நெருக்கடிக்கு பொறுப்பில்லை என்றாலும், நெருக்கடியைத் தீர்ப்பதற்கான அரசாங்கத்தின் முன்னெடுப்புக்களின் விளைவுகளை அவர்கள் தாங்கிக் கொள்ள வேண்டியுள்ளது. இந்தப் பின்னணியில், நாட்டின் தற்போதைய ஆட்சி நிலை தொடர்பான மக்களின் அபிப்பிராயங்களை அறிந்து கொள்ளும் வகையில் இந்த கணக்கெடுப்பு ஆய்வு வடிவமைக்கப்பட்டது.


## முறைமையியல்

பகுதியளவில் கட்டமைக்கப்பட்ட கேள்விக்கொத்தைப் பயன்படுத்தி சிங்களம், தமிழ், மலையக தமிழ் மற்றும் முஸ்லிம் ஆகிய நான்கு முக்கிய இன சமூகங்களைச் சேர்ந்த 1350 நபர்களை மாதிரியாகக் கொண்டு இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. பல கட்டங்களில் எழுமாற்றைக் கொண்ட அடுக்கு மாதிரி நுட்பத்தைப் பயன்படுத்தி மாதிரியின் இடம் தெரிவு செய்யப்பட்டதுடன், அப்பிரதேசத்தினுள் பதிலளிப்பவரை தெரிவு செய்வதற்கும் எழுமாற்று முறை பயன்படுத்தப்பட்டது. அந்த வகையில் இந்த மாதிரியானது நாட்டின் 25 மாவட்டங்களிலும் நகர்ப்புற மற்றும் கிராமப்புறங்களைச் சேர்ந்த ஆண்கள் மற்றும் பெண்களை உள்ளடக்குகின்றது. நான்கு பிரதான இன சமூகங்களைச் சேர்ந்த 80 வெளிக்கள ஆய்வாளர்கள் (ஆண் மற்றும் பெண்) தரவு சேகரிப்பில் ஈடுபட்டதுடன், ஆய்விற்கான வெளிக்கள பணியானது 2023 நவம்பர் 6 முதல் 23 ஆம் திகதி வரை நடாத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து தரவுத் தொகுப்பானது நாட்டின் சனத்தொகையின் மாவட்டம் மற்றும் இன விகிதாசாரத்தைப் பிரதிபலிக்கும் வகையில் மதிப்பேற்றப்பட்டதுடன் அரசியல் விஞ்ஞானத்திற்கான புள்ளிவிபரவியல் தொகுப்பைப் SPSS பயன்படுத்தி பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டது.


# ஆய்வு முடிவுகள்

## தற்போதைய அரசாங்கத்திடம் முன்வைக்கப்படுகின்ற முக்கிய கோரிக்கைகள் பற்றிய கருத்துக்கள்

வரைபடம் 1: முக்கிய கோரிக்கைகள் பற்றிய கருத்து





வரைபடம் 2: முக்கிய கோரிக்கைகள் பற்றிய கருத்து - வயதின் அடிப்படையில்




பெரும்பான்மையான இலங்கையர்கள் அரசியல் தலைமையின் பொறுப்புக்கூறலை மேம்படுத்த வேண்டும் என்று கோருகின்றனர். உதாரணமாக, பதிலளிப்பவர்களில் கிட்டத்தட்ட அனைவருமே பொருளாதார நெருக்கடிக்கு காரணமானவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படல் (பொறுப்புக்கூற வைத்தல்) வேண்டும் என்று குறிப்பிடுகின்றனர். அதேபோன்று ஜனாதிபதி உட்பட அனைத்து அரசியல்வாதிகளும் தமது சொத்து விபரங்களை வெளிப்படுத்த வேண்டும் எனவும் அவர்கள் வலியுறுத்துகின்றனர். மேலும், உரிய நேரத்தில் தேர்தலை நடத்த வேண்டும் என்றும், அனைத்து அரசியல்வாதிகளும் கணக்காய்வுக்கு உட்படுத்தப்படுவதுடன், கணக்கில் வராத அவர்களது சொத்துக்கள் அனைத்தும் அரசுடமை ஆக்கப்படல் வேண்டும் என்றும் பதிலளிப்பவர்கள் தெரிவிக்கின்றனர். இலங்கையின் பெரியவர்கள் (30 வயதிற்கு மேற்பட்டவர்கள்) விட இளைஞர் யுவதிகளே (18- 29 வயதிற்குட்பட்டவர்கள்) அரசியல் தலைமைகளை பொறுப்புக்கூற வைக்க வேண்டும் என்று அதிகம் கோருகின்றனர், எடுத்துக்காட்டாக, 18 முதல் 29 வயது வரை உள்ளவர்களில் 97% ஆனோர் பொருளாதார நெருக்கடிக்கு காரணமானவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படல் (பொறுப்புக்கூற வைத்தல்) வேண்டும் என்று கூறுகின்றனர். ஏறக்குறைய இதே விகிதமான இளைஞர் மற்றும் யுவதிகள் ஜனாதிபதி உட்பட அனைத்து அரசியல்வாதிகளும் தங்கள் சொத்து விபரங்களை வெளிப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்துகின்றனர். மேலும், அனைத்து அரசியல்வாதிகளும் கணக்காய்வுக்கு உட்படுத்தப்படுவதுடன், கணக்கில் வராத அவர்களது சொத்துக்கள் அனைத்தும் அரசுடமை ஆக்கப்படல் வேண்டும் என்று 93% ஆன இளைஞர் மற்றும் யுவதிகள் நம்புகின்றார்கள்.

## ஊழலின் அளவு பற்றிய கருத்துக்கள்

வரைபடம் 3: ஊழலின் அளவு பற்றிய கருத்து




வரைபடம் 4: ஊழலின் அளவு பற்றிய கருத்து - வயது மற்றும் பிரதேச அடிப்படையில்




மேலும் இலங்கையில் பெரும்பான்மையானோர், பொருளாதார நெருக்கடிக்கு முன்னைய காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில், ஊழலின் அளவு தற்போது அதிகரித்துள்ளது என்று நம்புவதாக இவ் ஆய்வு தெரிவிக்கின்றது. இந்தக் கருத்தை (நகரப்புறம் மற்றும் கிராமப்புறம்) அனைத்து பிரதேச மட்டங்களிலும் மற்றும் எல்லா வயதினரிடையேயும் காணக்ககூடியதாக உள்ளது.

## உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் மற்றும் உத்தேச நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டம் பற்றிய கருத்துக்கள்

வரைபடம் 5: உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் மற்றும் உத்தேச நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டம் பற்றி அறிந்துள்ளமை




விக்கிரமசிங்க அரசாங்கத்தினால் முன்மொழியப்பட்ட உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் மற்றும் உத்தேச நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டம் ஆகியன தொடர்பில், தெரிவிக்கையில் முன்மொழியப்பட்ட இந்த இரண்டு சட்டங்கள் குறித்தும் தாங்கள் அறிந்திருக்கவில்லை என பெரும்பான்மையான இலங்கையர்கள் தெரிவிக்கின்றனர். இந்த உத்தேச சட்டங்கள் தொடர்பில் அறிந்துள்ளதாக தெரிவிப்பவர்களின் வயது அடிப்படையின் இளைஞர் யுவதிகள் மற்றும் பெரியவர்கள் ஆகிய குழுக்களைச் சேர்ந்த 40% ஆனவர்கள் உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் தொடர்பில் அறிந்திருப்பதாக தெரிவிக்கின்றனர். மாறாக உத்தேச நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டம் தொடர்பில் குறைந்தளவு சதவிகிதத்தினரே (20-30%) அறிந்திருப்பதாக தெரிவிக்கின்றனர்.


உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை அறிந்திருப்பதாக தெரிவிப்பவர்களில் (38.5%) பெரும்பான்மையானவர்கள் (72.6%), அதிகாரத்தில் இருப்பவர்கள் தங்கள் நலனுக்காக இதனை தவறாக பயன்படுத்துவார்கள் மற்றும் இது மனித உரிமைகள் மீது எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும் என்ற காரணங்களின் அடிப்படையில் உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை அனுமதிக்கவில்லை என்று தெரிவிக்கின்றனர். அதே போன்று உத்தேச நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டம் தொடர்பில் அறிந்திருப்பதாக தெரிவிக்கும் (28.4%) ஆனவர்களில் பெரும்பான்மையானவர்கள் (71.1%) அதிகாரத்தில் இருப்பவர்கள் தங்கள் நலனுக்காக இதனை தவறாக பயன்படுத்துவார்கள் மற்றும் தற்போது உள்ள சட்டம் போதுமானது இந்த நேரத்தில் புதிய சட்டங்கள் எதுவும் தேவையில்லை என்ற காரணங்களின் அடிப்படையில் உத்தேச நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டத்தை அனுமதிக்கவில்லை என்று தெரிவிக்கின்றனர்.

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பாக அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகள் பற்றிய கருத்துக்கள்

வரைபடம் 6: உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பாக அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகள் பற்றிய கருத்து



வரைபடம் 7: உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பாக அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகள் பற்றிய கருத்து - மத அடிப்படையில்





உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு பொறுப்பானவர்கள் யார் என்று விசாரித்து அவர்களுக்கெதிராக தக்க நடவடிக்கை எடுக்க (பொறுப்புக்கூற வைத்தல்) இலங்கை அரசாங்கம் இது வரை முன்னெடுத்த நடவடிக்கைகள் தொடர்பில் திருப்தியடையவில்லை என அதி பெரும்பான்மையானவர்கள் (89.6%) தெரிவிப்பதன் மூலம் இந்த விடயம் தொடர்பில் கத்தோலிக்க திருச்சபையின் விரக்தி நிலையை பகிர்ந்துகொள்கின்றனர். இந்தக் கருத்தை எல்லா நான்கு மத சமூகங்கத்தவர்கள் மத்தியிலும் காணக்கூடியதாக உள்ளது.


உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகள் பற்றி பல்வேறு தரப்பினர் வேறுபட்ட கருத்துக்களை வெளியிட்டு வருகின்ற நிலையில், இந்த விடயம் தொடர்பில் சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று 34.4% ஆனோர் நம்புகின்றனர். 32.8% ஆனவர்கள் சர்வதேச கண்காணிப்பாளர்களுடன் கூடிய உள்நாட்டு விசாரணை நடத்தப்படல் வேண்டும் என்று வலியுறுத்துகின்றனர், 21.8% ஆனோர் உள்நாட்டு விசாரணையே போதுமானது என்று நம்புகின்றனர். எவ்வாறாயினும், கிறிஸ்தவ சமூகத்தின் குறிப்பிடத்தக்க சதவீதத்தினர் (ரோமன் கத்தோலிக்க மற்றும் ரோமன் கத்தோலிக்கம் அல்லாத) உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று தெரிவிப்பது உள்நாட்டு விசாரணை தொடர்பில் அவர்களின் நம்பிக்கையின்மையை வெளிப்படுத்துகின்றது.

## சர்வதேச நாணய நிதியம் பரிந்துரைத்துள்ள கொள்கை மாற்றங்கள்/ கட்டமைப்பு சீர்திருத்தங்கள் பற்றிய கருத்துக்கள்

வரைபடம் 8: சர்வதேச நாணய நிதியம் பரிந்துரைத்துள்ள கொள்கை மாற்றங்கள்/ கட்டமைப்பு சீர்திருத்தங்கள் பற்றிய அறிந்துள்ளமை




வரைபடம் 9: சர்வதேச நாணய நிதியம் பரிந்துரைத்துள்ள கொள்கை மாற்றங்கள்/ கட்டமைப்பு சீர்திருத்தங்கள் பற்றிய அறிந்துள்ளமை - வயது மற்றும் பிரதேச அடிப்படையில்




ஆய்வு முடிவுகளின் படி, பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள இலங்கைக்கு நிதி உதவி வழங்குவதற்கு சர்வதேச நாணய நிதியம் சில கொள்கை மாற்றங்கள் மற்றும் கட்டமைப்பு சீர்திருத்தங்களை பரிந்துரைத்துள்ளது என்பது தொடர்பில் தாங்கள் அறிந்திருப்பதாக 60.2% ஆனோர் தெரிவிக்கின்றனர். குறிப்பிடத்தக்க வகையில் இந்த அறிந்துவைத்துள்ள நிலை கிராமபுற மக்கள் மத்தியிலே அதிகமாக காணப்படுகின்றது.

சர்வதேச நாணய நிதியத்தின் பரிந்துரைகள் தொடர்பில் அறிந்துள்ளவர்களில், 68.9% ஆனவர்கள் இந்த கொள்கை மாற்றங்கள்/ கட்டமைப்பு சீர்திருத்தங்கள் இலங்கை தற்போதைய பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு முக்கியமானவை என்று நம்புகின்றனர். இந்தக் கண்ணோட்டமானது, அனைத்து வயது மட்டத்தினர், நகர்ப்புற மற்றும் கிராமப்புறத்தைச் சேர்ந்த 60% இற்கும் மேற்பட்டவர்களின் மத்தியில் காணப்படுகின்றது.